**அம்பகமுவ பிரதேச சபை**

**நுவரெலியா மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து அம்பகமுவ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குரிய வண்டில்களின் எண்ணிக்கை 85 ஆக இருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 786,970 ஆக இருந்தது. எனினும், அத்திகதியில் சபைக்குரிய வண்டில்களின் எண்ணிக்கை 29 ஆக இருந்ததுடன் அவற்றின் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 11 ஏக்கர் 2 ரூட் பரப்பளவான 7 காணித்துண்டுகளின் பெறுமதி ரூபா 34,000 என மிக குறைந்த பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்தமையால் காணிகளின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களில் ரூபா 17,000 பெறுமதிக்கு உள்ளடக்கப்பட்டிருந்த 02 ஏக்கர் அளவிலான கிராம சபை அலுவலகத்தின் காணியில் 1 ரூட் மற்றும் 33 பேர்ச் காணி ரூபா 3,500,000 இற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய முழுக் காணியும் சபைக்கு உரித்து என கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 640,390 தொகையான கடன்பட்டோர் இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 117,617 ஆன மதிப்பிழந்த காசோலைகளுக்காக பணம் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் அம்மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதி அறவிடப்பட வேண்டிய பணமாக ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 ஆண்டுகள் 9 ஆண்டுகள் வரையான காலப்பகுதி கடந்திருந்த 2 பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 925,474 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வுசெய்யப்படாத 1 மாதம் முதல் 5 ஆண்டுகள் வரையான காலப்பகுதி கடந்திருந்த 2 வைப்பு மீதிகளின் பெறுமதி ரூபா 6,499,033 ஆக இருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 638,021 தொகையான கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

-------------------------

### 2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,910,676 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 12,479,851 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,569,175 தொகையான வீழ்ச்சியொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------------------

நிதி விளைவுகளில் ரூபா 2,569,175 ஆன வீழ்ச்சிக்கு பிரதானமாக 3 வருமான விடயங்களில் குறைவும் 4 செலவின விடயங்களில் அதிகரிப்பும் உட்பட ஏனைய வருமானம் மற்றும் செலவின விடயங்களில் வேறுபாடுகள் தாக்கமளித்திருந்தன.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நடைமுறைச் சொத்துக்களுடன் நடைமுறைப் பொறுப்புக்களை ஒப்பிடும் போது நடைமுறை விகிதம் 0:9:1 என பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே நடைமுறைச் சொத்துக்களில் அளவான ரூபா 107,167,092 இல் ரூபா 73,623,239 தொகை நிர்மாண கடன்பட்டோராக இருப்பதால் நடைமுறைச் சொத்துக்களில் 68% நிர்மாணவேலை கடன்பட்டோரை கொண்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டின் மீதி ரூபா 437,547 ஆக இருந்தது.

### 2.4 வருமான நிருவாகம்

---------------------------------

சபை செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானம் தொடர்பான தகவலின் பிரகாரம் ரூபா 3,515,483 ஆன நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.4.1 வீத வரி

----------------

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் வருமானத்தை அறவிடக்கூடிய பின்வரும் வியாபாரங்களுக்காக உப விதிகள் விதித்து வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

(i) வாகன நிறுத்துமிடங்கள்

(ii) தனியார் தொலைபேசி, வானொலி மற்றும் தொலைக்காட்சி தொடர்பாடல் கோபுரங்கள்

(iii) சிறிய அளவிலான நீர் மன்சார நிலையம்

(iv) வியாபார விளம்பர அறிவித்தல் பதாகை காட்சிப்படுத்தல்

(ஆ) பொது மலசலகூடத்தை வாடகைக்கு வழங்கல்

சபைக்குரிய பொது மலசலகூடத்தினை 2016 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்குரிய 2015 நவம்பர் 23 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் கேள்வியின் பெறுமதியான ரூபா 600,000 இல் ரூபா 300,000 ஐ அத் திகதியிலும் எஞ்சிய ரூபா 300,000 ஐ 2016 யூன் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய போதிலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த 2015 நவம்பர் 23 ஆந் திகதி எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2016 பெப்ரவரி 12 ஆந் திகதி ரூபா 30,000 மாத்திரம் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதன் பின்னர் 2016 யூன் 30 ஆந் திகதி வரை எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. பின்னர் 4 சந்தர்ப்பங்களின் போது ரூபா 340,000 கிடைத்திருந்ததுடன் எஞ்சிய ரூபா 230,000 ஆன நிலுவைப் பணம் 2017 சனவரி 10 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

**2.4.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 3,501,524 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

(அ) பாவிக்கப்பட்ட 123 அடியிதழ்சேர் புத்தகங்களை கையேற்காமல் புதிய அடியிதழ்சேர் புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) சபைக்குச் சொந்தமான கிரிவன்எலிய ஆயர் வேத மருத்துவ நிலையத்தின் கூரை, உட்பக்கம் மற்றும் கதவுகள் என்பன உடைந்து உருக்குலைந்து நிலைமையில் காணப்பட்டதுடன் போதுமான மின்வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே களஞ்சிய வசதிகள்

காணப்படாமையினால் மருந்துகள் முறையற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் வீடு பழுதடைந்து காணப்பட்டதுடன் அதற்கு மலசலகூடம் மற்றும் நீர் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 387 இன் பிரகாரம் அரசின் கணக்குகளில் போதியளவு வங்கி மேலதிகப்பற்று ஏற்படுத்தும் வகையில் கொடுப்பனவு செய்யப்பட முடியாத போதிலும் இரண்டு வங்கி கணக்குகளுக்குரிய காசேடு மறை மீதி வரும் வகையில் காசோலை எழுதப்பட்டிருந்தன.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

---

2015 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வின் போது சபைக்குரிய 10 நூலகங்களில் ரூபா 228,023 பெறுமதியான 1929 புத்தகங்கள் காணாமல் போனதாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்

---

சபைக்குரிய மோட்டார் கார் வண்டியொன்றும் 02 மோட்டார் சைக்கிள்களும் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அல்லது பொருத்தமான செயற்பாடுகள் அல்லது எடுக்கப்படாமல் 1 முதல் 2 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

சபைக்கு சொந்தமான ரூபா 103,400 பெறுமதியான கமராவொன்றும் வீடியோ கமராவொன்றும் காணாமல் போயிருந்ததுடன் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 ஒப்பந்த நிருவாகம்

---

(அ) உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட முன்பள்ளி பாடசாலையொன்றிற்கு அலுமினியக் கதவுகளும் யன்னல்களும் பொருத்தும் போது செய்யப்படாத வேலைக்காக ரூபா 24,584 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், இப்பாடசாலையின் நீர்த் தேவைப்பாட்டிற்காக 1000 லீற்றர் நீர்த் தாங்கியொன்றைப் பொருத்துவதற்காக ரூபா 29,126 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 500 லீற்றர் நீர்த்தாங்கியொன்று பொருத்தப்பட்டிருந்தது.

(அ) மீளாய்வாண்டின் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 268,781,961 தொகையான 19 மூலதன செலவின விடயங்கள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுப்பொருட்களை முகாமை செய்வதற்காக பேணப்பட்டிருந்த முன்னனி செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உற்பத்தி செய்யப்பட்ட 7000 கி.கி கொம்போஸ்ட் அளவிலான பசளை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன், அவற்றை விற்பனை செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக புதிதாக உற்பத்தி செய்யப்படும் பசளையை களஞ்சியப்படுத்துவதற்காக இடவசதிகள் காணாமல் இருந்ததுடன் பசளையின் செயற்திறன் தன்மை உதாசீனப்படுத்த காரணமாக இருந்தது.

(ஆ) திண்மக் கழிவுப் பொருட்கள் அரைப்பதற்குப் பயன்படுத்தும் இயந்திரத்தின் பற்கள் சிதைவடைந்திருந்தமையால் 7 மாத காலமாக காலப்பகுதியில் பயன்படுத்தாமல் அகற்றப்பட்டிருந்தது.

(இ) திண்மக் கழிவுப் பொருட்கள் அடங்கியுள்ள பொலித்தீன் முறையாக அரைக்கப்படாமல் செயற்பாட்டு நிலையத்திற்கு அருகில் மண் இடப்பட்டு மூடப்பட்டிருந்ததுடன் சில பொலித்தீன் பகுதிகள் நிலத்தில் அங்குமிங்கும் காணப்பட்டன.

(ஈ) பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வெவ்வேறு வகையான அதிகமான வெற்று போத்தல்கள் நிலைய வளவில் சேர்த்து வைக்கப்பட்டிருந்தது.

(உ) நிலையத்தின் நடவடிக்கைகளை முறையாக பேணிச் செல்வதற்கு போதியளவு தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.7 சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்**

---

2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க 2008 இன் சனவரி 25 ஆந் திகதிய 1533 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய 9 வியாபாரங்களுக்கும் புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கபட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவினங்கள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் இணக்கஞ் செய்யும் போது 6 வருமான விடயங்களில் 7 சதவீதம் முதல் 51 சதவீதம் வரையும் 6 செலவின விடயங்களில் 19 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையும் விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானங்கள் அறவிடப்படாமை. |
| (ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | சபைக்கு பெறவேண்டிய பணத்தை தீர்வு செய்யாமை மற்றும் செலுத்த வேண்டிய தொகைகளை தீர்வு செய்யாமை. |
| (இ) நிலையான சொத்துக்கள் | சபையின் நிலையான சொத்துக்கள் முறையாக மதிப்பீடு செய்யப்படாமை மற்றும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) கணக்கீடு | கணக்காண்டிற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கணக்கீடு செய்யும் போது பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டமை. |